


உஸ்காடி தா அஸ்கதாஸூனா என்கிற ணிஜிகிவின் முழுப்பெயரை முதலும் கடைசியுமாக இந்த இடத்தில் சொல்லிவிடுவோம். ரிப்பீட் பண்ணுகிற பட்சத்தில், ஹாரிஸ் ஜெயராஜோ யாரோ பல்லவிக்குச் சுட்டுவிடும் அபாயம் இருக்கிறது. ஸ்பெயினில் தன்னாட்சி அதிகாரம் பெற்ற, பாஸ்க் மொழி பேசும் மெஜாரிடி மக்கள் வசிக்கும் பிராந்தியத்தில் பிறந்து வளர்ந்த இயக்கம்.

ஐரோப்பிய அரசியல் செட்டப்புகள் நமக்கு மிகவும் புதிதாக இருக்கும். அதான் தன்னாட்சி அதிகாரம் இருக்கிறதே, அப்புறம் எதற்கு இவர்கள் ஆயுதம் தூக்குகிறார்கள் என்று கேட்கக்கூடாது. அடிமைப்பட்டிருந்தால் தன்னாட்சி அவசியம். தன்னாட்சி இருந்தால் சுதந்திரம் அவசியம். சுதந்திரமும் இருந்தால் சொகுசு முக்கியம். அதுவும் அமைந்துவிட்டால் அப்புறம் ரொம்ப போரடிக்கும். யாரையாவது போட்டு நாலு சாத்து சாத்தலாம் என்று தோன்றும்.

அது கிடக்கட்டும் அமெரிக்க லாஜிக். நாம் விஷயத்துக்கு வருவோம். ஐரோப்பாவின் தென் கிழக்குக் கோடியில் ஆப்பிரிக்காவின் தலையில் இருக்கிற மொராக்கோவை முத்தமிடுகிற போஸில் இருக்கிற தேசம் ஸ்பெயின். நாடாளுமன்ற முடியாட்சி அமலில் இருக்கிறது. ஜான் கார்லோஸ் ஒண்ணு என்பவர் மன்னராக கிரீடம் அல்லது தொப்பி தரித்து இருக்கிறார். ஜோஸ் ரோட்ரிக்வஸ் ஸபாட்ரோ (Jose Rodreguez Zapatero) என்பவர் அதிபர். 1986 ஜனவரியில் ஐரோப்பிய யூனியனில் இரண்டறக் கலந்த ஸ்பெயினில் சுமார் நாற்பத்தைந்து கோடி பேர் வசிக்கவும் வாழவும் செய்கிறார்கள்.

நல்ல சௌக்கியமான பூமி. மன்னர்களும் சர்வாதிகாரிகளும் மாற்றி மாற்றி ஆண்டாலும், மக்கள் நலனுக்கு எல்லாக் காலத்திலும் முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கும் தேசம் அது. கிட்டத்தட்ட ஐம்பது லட்சம் சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பு. மக்கள் தொகை, மொழி, கலாசாரப் பின்னணி, இனம் இன்னபிற அத்தியாவசியங்களின் அடிப்படையில் மொத்த தேசத்தைப் பதினேழு பகுதிகளாகக் கூறு போட்டு தன்னாட்சி அதிகாரம் கொடுத்து விட்டார்கள்.

சட்ட திட்டங்களெல்லாம் அந்தந்த மாகாண சட்டமன்ற வரம்புக்குட்பட்டதுதான். ஒரு மரியாதைக்கு மத்திய அரசுக்கு ஃபைல் அனுப்பினால் போதும். மத்திய நாடாளுமன்றத்தில், ஒவ்வொரு மாகாணத்துக்கும் உரிய பிரதிநிதித்துவம் உண்டு. தலைநகர் மாட்ரிடுக்கு சபை கூடும் காலங்களில் போய் வருவதற்கு முதல் வகுப்பு ரயில், விமான டிக்கெட் சௌகரியங்கள் கொடுப்பார்கள். போய் வெளிநடப்புச் செய்துவிட்டு வந்துவிடலாம்.

ஒரு காலத்தில் நிறைய சண்டையெல்லாம் போட்டு, பிரிட்டனுக்குப் போட்டியாக உலகமெல்லாம் காலனிகள் அமைத்து ஆண்ட தேசம்தான். இருபதாம் நூற்றாண்டுக்குப் பிறகு, ஆடி அடங்கும் வாழ்க்கையடா என்று அடக்கி வாசிக்க ஆரம்பித்தார்கள். நாடு பிடிக்கும் வெறி அடங்கிய வினாடியே, தன்னிறைவு நோக்கிய பயணம் ஸ்பெயினில் தொடங்கிவிட்டது.

இந்த நாடு பிடிக்கும் வெறி அடங்குவதற்குக் காரணமாக இருந்தது, இரண்டாம் உலகப்போருக்கு முன்னால் ஸ்பெயினில் நடைபெற்ற ஓர் உள்நாட்டு யுத்தம். இரண்டாம் உலகப்போரின் வாசல் என்றே அந்த யுத்தத்தைச் சொல்வோர் உண்டு. ஸ்பெயின் ராணுவத்தில் ஒரு பகுதியினருக்கும் ஸ்பெயின் அரசுக்கும் இடையில் ஏற்பட்ட போர் அது. மக்கள் இரண்டு தரப்புக்கும் ஆதரவாகப் பிரிந்து நின்றார்கள். அடித்துக் கொண்டார்கள். 1936 முதல் 39 வரை நீடித்தது யுத்தம். ஆட்சியில் இருந்தவர்களுக்கு சோவியத் யூனியன் ஆதரவு கொடுத்தது. புரட்சியாளர்களுக்கு ஜெர்மனியும் இத்தாலியும் நேசக்கரம் நீட்டின.

இறுதியில் புரட்சியாளர்கள் யுத்தத்தில் வெற்றி பெற்று, ஒரு ராணுவ ஆட்சியை அமைத்தார்கள். ஃப்ரான்ஸிஸ்கோ ஃப்ராங்கோ என்பவர் ஸ்பெயினின் சர்வாதிகாரியாகப் பதவியில் அமர்ந்தார்.

அக்கரைக்கு இக்கரைப் பச்சை. ஆனால், எந்தப் பச்சையும் ரொம்ப நாள் தாங்காது; போரடித்துவிடும் என்பது சரித்திரம். மிகுந்த கஷ்டகாலங்களையெல்லாம் கடந்து, ஸ்பெயின் ஒருவாறு அமைதி கொண்டு ஜீவிக்க ஆரம்பித்தது 1955-க்குப் பிறகுதான். அதற்கு முன்னால் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிறகு நாயடி பேயடி பட்டு அரசியல் வலுவும் இல்லாமல் பொருளாதார பலமும் இல்லாமல் பஞ்சத்தில் அடிபட்ட பரதேசியாகியிருந்தது. ஐ.நா.வில் ஸ்பெயினை உள்ளே சேர்த்துக் கொள்ளக்கூட மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்.

அப்புறம் 1960-ம் வருடம் ஐபீரியன் பகுதியில் அமெரிக்காவுக்கு ஒரு ராணுவத்தளம் அமைக்க ஒத்துழைப்புக் கொடுத்து, கொஞ்சம் சொத்து சேர்த்தார்கள். அமெரிக்காவின் கருணைப் பார்வை கிடைத்தபடியால் மற்ற எல்லா கஷ்டங்களும் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கத் தொடங்கின.

ஜெனரல் ஃப்ராங்கோ நவம்பர் 1975-ல் இறந்துபோனார். அப்போதைய இளவரசர் ஜான் கார்லோஸ் மன்னராகவும் ஆட்சியாளராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். 78-ல் ஜனநாயகத்தை அறிமுகப்படுத்தினார்கள். முன்பே பார்த்த முடியாட்சி ஜனநாயகம். மன்னரும் இருப்பார், நாடாளுமன்றமும் இருக்கும். பிரிட்டன் மாதிரி.

மொழிவாரியாக, கலாசாரவாரியாகப் பிரதேசங்களைப் பிரித்து தன்னாட்சி அதிகாரம் வழங்கினார்கள். அப்போதுதான், 'நீயென்ன எனக்குத் தன்னாட்சி கொடுப்பது? நான் சுதந்திரமானவன். உன் அதிகாரத்தை உன்னோடு வைத்துக்கொள்' என்று பாஸ்க் மொழிப் பிரதேசிகள் முதன்முதலில் தெனாவட்டு பேச ஆரம்பித்தார்கள். இ.டி.ஏ. என்று ஒரு ஜென்மம் இருக்கிற விஷயம் வெளிச்சத்துக்கு வந்ததும் அப்போதுதான்.

இ.டி.ஏ., ஓர் இடதுசாரி இயக்கம். மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் கட்சி.

மார்க்ஸ் கண்டுபிடித்த சித்தாந்தம் கம்யூனிசம். அதை முதன் முதலில் வெற்றிகரமான ஆட்சிமுறையாக மாற்றியவர் லெனின். அப்புறம் என்ன மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்?

நீட்டி முழக்காமல் சுலபமாகப் புரிந்துகொள்ள விரும்பினால் இப்படிச் சொல்லலாம். முதலாளித்துவம் ஒழியவேண்டுமென்பது கம்யூனிசத்தின் அடிப்படை. அமைதி வழியில் அது சாத்தியமில்லை, ஆயுதமேந்தித்தான் ஒழிக்கவேண்டும் என்கிற சூழ்நிலை வந்தால், தயங்காமல் கத்தி அல்லது துப்பாக்கி எடு என்பது மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் வழி. மார்க்ஸ் கம்யூனிசத்தை அளித்தார், லெனின் புரட்சியை அறிமுகப்படுத்தினார். தீர்ந்தது விஷயம்.

இ.டி.ஏ.வின் கனவு, லட்சியம், விருப்பம் அனைத்தும் ஒன்றுதான். நவரா (Navarra) என்கிற சுதந்திர தேசம். ஸ்பெயின் முடியாட்சிக்கும் அதற்கும் ஸ்நானப் பிராப்தி கூட இருக்கக் கூடாது. நீ யாரோ, இங்கு நான் யாரோ. நவராவுக்குத் தனியொரு மன்னர் இருப்பார். ராணுவம் ஆட்சி செய்யும். என் மக்கள், என் மொழி, என் தேசம். ஸ்பெயினாவது, புடலங்காயாவது?

1959-ல் இயக்கம் ஆரம்பித்து நாளது தேதி வரை 960 படுகொலைகளும், சுமார் அறுபது மகத்தான ஆள் கடத்தல் வைபவங்களும் செய்து முடித்து ஓய்வில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் இ.டி.ஏ.வின் கொள்கையிலோ, கோஷத்திலோ இன்றுவரை சமரசம் என்று ஏதுமில்லை. வேண்டியது தனிநாடு. வைப்போம் வெடிகுண்டு. போன வாரம் பார்த்த அந்தப் பிரதமர் படுகொலையெல்லாம் ஜுஜுபி. அதையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் விதத்தில் என்னென்னமோ தில்லாலங்கடியெல்லாம் பண்ணியிருக்கிறார்கள்.

ஸ்பெயினில் கடந்த முப்பத்தைந்து வருடங்களாக என்ன கெட்ட காரியம் நடந்தாலும், முதலில் இ.டி.ஏ. எழுதிய திரைக்கதையா என்றுதான் பார்ப்பார்கள். இல்லை என்று தெரிந்த பிறகுதான் பார்வையை நகர்த்துவார்கள்.

அப்படியொன்றும் மகத்தான மக்கள் ஆதரவு கொண்ட இயக்கம் என்றும் சொல்லிவிட முடியாது. ஒவ்வொரு காலகட்டத்திலும் இருபதிலிருந்து முப்பது வயதுக்குட்பட்ட பாஸ்க் பிராந்திய இளைஞர்கள் இ.டி.ஏ. அனுதாபிகளாக இருப்பார்கள். ஒரு கல்யாணம் அல்லது உத்தியோகம் ஆகிவிட்டால் போதும். மார்க்சிய - லெனினியக் கனவுகளையெல்லாம் மூட்டை கட்டிவைத்துவிட்டு, தேசிய நீரோட்டத்தில் கரைந்துவிடுவார்கள். அப்புறம் மீண்டும் அடுத்த ஜெனரேஷன் வரும். அது போனால் அதற்கடுத்தது.

இ.டி.ஏ.வின் பலம் அதுதான். எப்போதும் ஃப்ரெஷ். எப்போதும் இளைஞர் சப்போர்ட். எப்போதும் துடிப்பு. நாலைந்து தலைவர்களைத் தவிர, இயக்கத்தில் தாடி நரைத்தவர்கள் யாரும் கிடையாது. தலைவர்கள் கூட வழிகாட்டுவதுடன் நிறுத்திக்கொண்டுவிடுவார்கள். செயல்திட்டங்கள் தீட்டுவதெல்லாம் இளைஞர் படைதான். என்ன வேண்டுமானாலும் செய்யலாம். செய்வதன் அதிர்ச்சி மதிப்பு குறைந்தபட்சம் தேசத்தைக் குலுக்க வேண்டும். ஒவ்வொரு செயலும் ஐரோப்பிய அளவில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடிந்தால் நல்லது. அதுதான் லட்சியம். எங்களைத் திரும்பிப் பாருங்கள். நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம். எங்கள் தனிநாடு கோரிக்கையில் இருக்கிற நியாயத்தைப் புரிந்துகொள்ளுங்கள். மொழி ரீதியிலும் கலாசார ரீதியிலும் எங்களுக்கும் ஸ்பெயினுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. நாங்கள் பிரிய விரும்புவதில் என்ன தவறு?

தமது இந்தக் குரலுக்கு வலு சேர்க்க பலவிதமான உத்திகளை இ.டி.ஏ. மேற்கொள்கிறது. பாஸ்க் மாகாணத்தில் அடைக்கலம் என்று கேட்டு யார் வந்தாலும், உடனே ஏற்றுக்கொண்டுவிடுவார்கள். அதைத் தங்கள் 'தேசிய குணமாக' அறிவித்திருக்கிறது இ.டி.ஏ.

மார்க்சிய - லெனினிய சித்தாந்தவாதிகள்தான் என்றில்லை. எந்தப் போராளி இயக்கமானாலும் சரி. பாஸ்கில் வந்து தங்கலாம். அரசியல் அடைக்கலம் கோரலாம். கேட்டதும் கிடைக்கும். நீ என்ன அயோக்கியத்தனம் பண்ணிவிட்டு வந்தாய் என்று இ.டி.ஏ. கேட்காது. தங்க இடம், சாப்பிட ரொட்டி, போர்ப் பயிற்சிக்கு மறைவிடம். அவ்வளவுதானே? இந்தா சாப்பிடு என்று அள்ளிக் கொடுத்துவிடுவார்கள்.

அப்படி வருகிற இயக்கங்களுக்கு இ.டி.ஏ. தன்னைப் பற்றி எடுத்துச் சொல்லும். தானும் தன் போராட்டமும். 'என்றைக்காவது ஒருநாள் ஸ்பெயின் அரசாங்கத்துடன் நாங்கள் முழு நீள யுத்தம் நிகழ்த்துவோம். அப்போது நீ எங்களை நினைவில் வைத்துக்கொள். அது போதும்.'

போராளி இயக்கங்களுக்குத்தான் என்றில்லை. ஐரோப்பாவின் பிரசித்தி பெற்ற கிரிமினல்கள், கொலை, கொள்ளை, கடத்தல்காரர்கள் அனைவரும் ஏதாவது இடியாப்பச் சிக்கல், நெய் முறுகல் நெருக்கடி என்று வந்தால், உடனடியாக பாஸ்க் பிராந்தியத்துக்கு ஓடிவந்துவிடுவது வழக்கம். கேள்வி கேட்காமல் இடம் கொடுக்கிற ஒரே பிராந்தியம் அது.

தன்னாட்சி அதிகாரம் படைத்த மாகாணம் என்பதால், ஸ்பெயினின் மத்திய அரசாங்கம்

இதையெல்லாம் ஜனநாயகத்தின் பக்கவாதம் என்று நினைத்து ஒன்றும் செய்யாது. ஆகவே, இ.டி.ஏ., பாஸ்க் மாகாணத்து ஆட்சியாளர்களைத் தீர்மானித்துப் பதவியில் அமர்த்தும் வரை அரசியல் வேலை செய்யும். அவர்கள் பதவியில் அமர்ந்தவுடன் இ.டி.ஏ.வுக்குக் கைகட்டியாகவேண்டும். என்ன சொன்னாலும் கேட்பது என்பதற்கு மாறாக, எதுவும் செய்துவிட முடியாது.

கொஞ்சம் நிறுத்தி, நிதானமாக யோசித்துப் பார்த்தால், பாஸ்க் மொழி மாகாணத்தின் பிரச்னை அல்லது இ.டி.ஏ.வின் பிரச்னையை நமது அஸ்ஸாம் மாநிலப் பிரச்னையுடன் ஓரளவு ஒப்பிட்டுப் பார்த்துப் புரிந்து கொள்ள முடியும். உல்ஃபாக்கள் கேட்பது என்ன? அஸ்ஸாமியர்களுக்கும் இந்தியர்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எங்கள் வம்சமே வேறு. மொழி வேறு. கலாசாரம் வேறு. நாங்கள் ஹிந்தியை வெறுப்பவர்கள். இந்தியர்களை வெறுப்பவர்கள். எனவே, எங்களுக்குத் தனிநாடு அவசியம்.

இதுதானே?

இ.டி.ஏ. கேட்பதும் இம்மாதிரிதான். சில வேறுபாடுகள் இருக்கின்றன. அஸ்ஸாமில் நிகழ்ந்ததுபோல அண்டை தேசத்து ஊடுருவல்கள் எல்லாம் பாஸ்க் பிராந்தியத்தில் கிடையாது. ஸ்பெயினில் மட்டுமல்லாமல், பிரான்ஸின் எல்லையோரப் பகுதிகள் சிலவற்றிலும் பாஸ்க் மொழி பேசும் மக்கள் வசிக்கிறார்கள். ஒருங்கிணைந்த தனிதேசம் என்கிற பாட்டு, தொடக்கம் முதலே இருக்கிறது. ஆனால், நடைமுறையில் அது அத்தனை எளிமையானதல்ல. இது இ.டி.ஏ.வுக்கும் தெரியும். எனவே, இப்போதைக்கு ஸ்பெயினிலிருந்து பிரிவது, மற்றதை அப்புறம் விளம்பர இடைவேளைக்குப் பிறகு பார்த்துக்கொள்வது என்று இருக்கிறார்கள்.

முதலிலிருந்தே தன்னாட்சி அதிகாரம், ஸ்பெயினின் வளமான ஜனநாயக பலம் ஆகிய சௌகரியங்கள் இருந்தபடியால் இ.டி.ஏ. பீமபுஷ்டியுடன் வளர்ந்து நிலைத்துவிட்டது.

இந்த அளவில் அறிமுகத்தை நிறுத்திக்கொண்டு இயக்கத்துக்கு உள்ளே போய்விடுவோம். தேவைப்பட்டால் நடுநடுவே கொஞ்சம் தொட்டுக்கொள்ளலாம். சரியா?